# அரசியல் தீர்வுகாண ஆஸி. மீண்டும் வலியுறுத்து

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 34 | வைகாசி 6 | துல்ஹஜ்ஜா 5 | இதழ்: 99

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 20-5-1991

5-1991

(கன்பரா)

இலங்கைப் பிரச்சனைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றையே காணுமாறு, ஆஸ்திரேலியா மீண்டும் இலங்கை அரசை வற்புறுத்தியுள்ளது. இலங்கைப் பிரச்சனை மோசமடைந்துவருவதால், இதனைத் தீர்த்துவைப்பதற்காக 'காமன்வெல்த், செயலரை இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் மத்தியஸ்தராக்குவதையும் ஆஸ்திரே

(4-ம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடி முஸ்லிம் பகுதியில்
# ஆயுதங்கள் மீட்பு

(மட்டுநகர்)

காத்தான்குடியில் முஸ்லிம் கல்வாழும் பகுதியில்பொலிஸாரால் நடந்த வியாழக்கிழமை பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

இரகசியத் தகவலொன்றையடுத்து குறிக்கப்பட்ட பகுதியைச் சுற்றிவளைத்த பொலிசார் அங்கிருந்து ரைபிள்கள். துப்பாக்கிகள் போன்றவற்றை

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழு பிரான்ஸ் செல்கிறது

(கொழும்பு)

கடந்த 3-ம் திகதி வவுனியா புதுக்குளத்தில் சிறிலங்கா விமானப்படையினர் நடத்திய தாக்குதலில் காயமடைந்து தாயகம் திரும்பிய எம். எஸ்.

எவ் நிறுவன பிரதிநிதிகளின் வாக்கு மூலங்களைப் பதிவு

(4ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் பத்தாவது பொதுத் தேர்தல்!
# முதலாம் கட்ட வாக்களிப்பு
# இன்று காலை ஆரம்பமாகிறது!

## 9 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்களில் 20 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி!!

(புதுடில்லி)

இந்தியாவின் பத்தாவது பொதுத்தேர்தல் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. முதலாம்கட்ட வாக்களிப்பு இன்று நடைபெறும். எதிர்வரும் 23ம் திகதி இரண்டாம் கட்ட வாக்களிப்பும், 26ம் திகதி மூன்றுவது இறுதிக்கட்ட வாக்களிப்பும் நடைபெறும். வாக்குகளை எண்ணும் வேலைகள் 27ம் திகதி காலை ஆரம்பமாகும்.

இன்று ஒன்பது மாநிலங்கள், நான்கு யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 204 மக்களவை தொகுதிகளுக்கு வாக்களிப்பு நடைபெறும். இருபதுகோடி மக்கள் இன்று வாக்களிகத் தகுதிபெற்றுள்ளார்கள்.

ஒன்பது மாநிலங்களையும், நான்கு மத்திய ஆளுகை பிரதேசங்களையும் சேர்ந்த 204 மக்களவைத் தொகுதிகளிலும் மேற்கு வங்காளம், ஹரியானா மாநிலங்களின் சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் உத்தரப்பிரதேச மாநிலத்தில் 425 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 200 தொகுதிகளிலும் இன்று முதற்கட்ட வாக்களிப்பு நடைபெறவிருக்கிறது.

இந்தத் தொகுதிகளில் தேர்தல் பிரசாரம் நேற்று முன்தினம் மாலை 5 மணியுடன் முடிவடைந்தது.

இன்று நடைபெறவிருக்கும் முதல் கட்ட வாக்களிப்பில் சுமார் இருபது கோடி வாக்காளர்கள் மூவாயிரத்துத்தொளாயிரத்துக்கதிகமான வேட்பாளர்களிடையே இருந்து 204 மக்களவைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவுள்ளார்கள்.

இரண்டாவது கட்ட வாக்குப் பதிவு இம்மாதம் 23-ஆம் திகதி வியாழக்கிழமை 13 மாநிலங்களிலும், இரு மத்திய ஆளுகைப் பகுதியையும் சேர்ந்த 115தொகுதிகளிலும், மூன்றுவது கட்ட வாக்குப் பதிவு இம்மாதம் 26-ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாடு உட்பட ஏழு மாநிலங்களிலும்

(4ம் பக்கம் பார்க்க)

## திடீர் சோதனைகளுக்கு ஒத்துழைப்பு தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தடுத்து வைக்கப்பட்டிருந்த நம்மொருவர் காவலிலிருந்து தப்பியோடிவிட்டதால் அவரை மீண்டும் கைதுசெய்

(4-ம் பக்கம் பார்க்க)

## தடுத்துவைக்கப்பட்ட 21 இளைஞர்கள் இன்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

பல்வேறு காரணங்களுக்காக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 21 இளைஞர்கள் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் விடுதலைப் புலிகளின் வலிகாமம் மேற்கு (சுன்னாகம்) செயலகத்தில் விடுதலைசெய்யப்படவுள்ளதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

விடுதலை செய்யப்படவுள்ள 21 தமிழ் இளைஞர்களின் பெயர் விபரங்கள் வருமாறு: பிரான்சிஸ் டானியல் (பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி), நல்லையா இராசலிங்கம் (தம்பாலை, அச்சுவேலி), நவரட்ணம் சுந்தரவதனன் (கோயி

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் தொண்டமான் பேட்டி
# இலங்கை உள்விவகாரங்களில் இந்தியா இனி தலையிடாது
## அமைதிப்படை மீண்டும் வராது

(கொழும்பு)

இந்திய பொதுத்தேர்தலில் எந்தக் கட்சி வெற்றிபெற்று பதவிக்கு வந்தாலும் இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா நேரடியாகத் தலையிடப்போவதில்லையென நாம் உறுதியாக நம்பலாமென்று கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி உல்லாசத்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இந்தியப்படை மீண்டும் இலங்கைக்கு வரமாட்டாது.

(4-ம் பக்கம் பார்க்க)

## அரிசி அன்பளிப்பு

(பருத்தித்துறை)

தீவுப்பகுதிகளிலிருந்து வன்செயல்களினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கென பருத்தித்துறை விநாயகர் தரும நிதியம் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதி

(4-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ், வி.பி. சிங் போட்டியிடும் தொகுதிகளில் வாக்களிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் இரண்டு முன்னாள் பிரதம மந்திரிகளான திரு. ராஜீவ் காந்தி, திரு. வி.பி. சிங் ஆகியோர் போட்டியிடும் தொகுதிகளில் இன்று வாக்களிப்பு நடைபெறும்.

இதேவேளையில் துணைப் பிரதமர் தேவிலால், மேற்கு வங்காள முதலமைச்சர் திரு. ஜோதிபாசு, உத்தரப் பிரதேச முதலமைச்சர் முலாயம் சிங் யாதவ், ஹரியானா முத லமைச்சர் பன்சிலால் மற்

[4ம் பக்கம் பார்க்க]

## ராஜீவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என மதிப்பீடு

(புதுடில்லி)

இந்தியாவில் நடைபெறும் 10வது பொதுத் தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்பு, திரு. ராஜீவ் காந்தி தலைமையிலான

(4-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை ஒரு 'மரணத்தீவு'

(அம்ஸ்ரடாம்)

நெதர்லாந்தில் அண்மையில் 'மரணத்தீவு' என்ற தலைப்பில் இலங்கை பற்றி ஒரு பிரசார நிகழ்ச்சி இடம்பெற்றது.

இலங்கையில் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுவதைச் சித்தரிக்கும் முகமாக இந்த 'மரணத்தீவு' நிகழ்ச்சி அம்ஸ்ரடாமில் இடம்பெற்றுள்ளது

(4-ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## தேவை

விளம்பழம் தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம். (ஏ-1311)

பூந்தோட்ட வேலையில் நல்ல அனுபவமுள்ள ஒரு நடுத்தர வயதுடைய, யாழ். நகரில் வசிப்பவர் உடனடியாகத் தேவை தகுதி உடையவர், பெருமாள்கோயில் தேவஸ்தானத்தில் நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாகச் சமுகம் கொடுக்கவும். சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். (சி4748)

## நகைச்சுவை

தமிழில் நாடகங்களுக்கு மட்டுமல்ல, நகைச்சுவைக்கும் பஞ்சம்: இரண்டையும் ஒருங்கே தருவன அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/-. முதலாம்பிள்ளை 30/- நூல்கள். (சி-4719)

## வேலைவாய்ப்பு

மாதந்தோறும் ரூ: 6000/- வருமானம் தரும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்! ஓய்வுநேரத்திலேயே உழைத்து முன்னேறுங்கள் காணுங்கள்! மாணவர்களும்பெரியவர்களும் பயனடைகிறார்கள். சுயவிலாசம் எழுதப்பெற்ற முத்திரை ஒட்டப்பட்ட கவருடன் விண்ணப்பியுங்கள்: விளம்பர இல: 4740 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-4740)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# கப்டன் சுந்தருக்கு தீவுப்பகுதியில் அஞ்சலி

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறை சின்னமடு பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும், தமிழீழவிடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரமரணமடைந்த கப்டன் சுந்தரின் பூதவுடல் தீவுப்பகுதி மக்களின் அஞ்சலிக்காக மண்கும்பானில் வைக்கப்பட்டது.

கப்டன் சுந்தரின் பூதவுடல் மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் கடந்த வாரம் காலையில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மாலை 2 மணியளவில் அவரது பூதவுடல் தீயுடன் சங்கமமானது. (101

# வாழ்த்துகிறோம்

தெய்வீக திருக்குறள்
தமிழரின் தேசிய நூல்

## திரு. நடராசா யோகநாதன்



தெய்வீக திருக்குறள் மன்றம், YOUNG MEN'S DIVINE KURAL ASSOCIATION, Y.M.D.A ஆகிய பல மன்றங்களின் நிறுவுனர்.

பொறியியலாளர் ஏ. என். யோகநாதனின் 64ஆவது பிறந்த நாளில் அவருக்கு எங்கள் நல் வாழ்த்துக்கள். அவரின் நற்பணிகள் தொடர அவருக்கு ஆண்டவன் அருள் பாலிப்பாராக.

யாழ். வாசகர் மன்றம், வசனெளி கேட்போர்மன்றம், Y. M. S. A., G. B. கில்சென்ற், Dr. R. கதிர்காமநாதன், N. நவரெத்தினசிங்கம் யோ. விஜயகுமார், A. வாமதேவன், K. இராமநாதன், S. உமாகாந்தன், M. சுதாகர், P. பொன்னுத்துரை

தொடர்பு:
67, புகையிரதநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(வீரகேசரி அலுவலகம் அருகில்)
(சி- 4753)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## மாரிமுத்து கனகரட்ணம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 21-04-1931 | 20-04-1991 |

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்;

இன்று எங்கள் இல்லத்தில் நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 1, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். [சி.4754]

# இராசி பலன்

20-05-1991
திங்கட்கிழமை

சப்தமி முன்னிரவு 8 07 வரை. ஆயில்யம் முன் இரவு 8-15 வரை. சித்தயோகம். இராகு காலம் காலை 7-22 முதல் 8-52 வரை: சுபநேரம் காலை 11-52 முதல் 1-22 வரை.

மேடம்: முயற்சியால் வெற்றி, மனதுக்குத்தாபம், வாபச் செயல்.

இடபம்: சுபச் செய்தி காரிய அனுகூலம், மனக் களிப்பு.

மிதுனம்: தகாத செயல், அதிகாரிகள் சச்சரவு, வீண் செலவு.

கடகம்: புதிய முயற்சி, சுற்றத்தினர் வருகை. பணலாபம்.

சிங்கம்: வீண் சிரமம், பிறர் உதவியை நாடுதல், தொழில் கஷ்டம்.

கன்னி: செல்வப்பெருக்கம், மனைவியால் செலவு, தொழில் சிறப்பு.

துலாம்: வஞ்சனையால் துன்பம், தெய்வபக்தி, அபவாதம்.

விருச்சிகம்: தனநஷ்டம், கட்டுப்படுதல், இடமாற்றம்.

தனுசு: காரிய விக்கினம், சத்துருபீடை, பித்தமயக்கம்.

மகரம்: போஜனசுகம், மித்திர லாபம், மரியாதை

கும்பம்: குடும்ப மகிழ்ச்சி, தாயின் பிரிவு, நிலைமாற்றம்.

மீனம்: மந்தநிலை, பணநஷ்டம், சுகவீனம், மறதி

-ஜோதிடர்

## உணவுஉற்பத்திக்குழுக்கள்

(பூநகரி)

பூநகரி முழங்காவில் பிரதேசத்திலுள்ள இரணைமாதா நகர் பகுதிகளில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் ஒவ்வொரு உற்பத்திக்குழுவாக ஒன்பது பேரைக் கொண்ட குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது:

இக்குழுக்கள் உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, பனைவளம், மீன்பிடி உற்பத்தி போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது. (23)

# 6-ம் மாத நினைவஞ்சலி



## சங்கரப்பிள்ளை செல்வரத்தினம்

(சிங்கம் இன்டஸ்றீஸ் பங்காளர்)
பாலாவோடை — காரைநகர்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04 - 08 - 1958 | 24 - 11 - 1990 |

பார்வைக்கு இனியவரே
பண்பான எம்மவரே
பரிதவிக்க விட்டுவிட்டு
பரமனடி சேர்ந்தீரே

அன்பான தந்தையாகி
அருமையான தலைவனாகி
அரவணைத்தீர் எம்மையெல்லாம் - ஆனால் நாம்
அங்கலாய்க்க பிரிந்தீரே

ஓடிவிட்டன மாதங்கள் ஆறு - இன்னும்
ஓயவில்லை எம் கண்ணீர் ஆறு
ஓயாது எம்துயரம் ஒருநாளும் - ஆனாலும்
வேண்டுகிறோம் இறைவனிடம்
உன் ஆத்ம சாந்தியினை

ஓம்சாந்தி சாந்தி சாந்தி

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்.

அன்னை இல்லம்,
சேச் லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
கல்வியங்காடு. [சி 4752]

# கட்டாக்காலி நாய்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் அதிகரித்துவரும் கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிப்பதில் யாழ். மாநகரசபைப்பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரையில் 75க்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்களை பிடித்துள்ளனர். யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் 35க்கு மேற்பட்ட நாய்களை மாநகரசபைப்பகுதியினர் பிடித்துள்ளனர். (56)

# பிரிவுபசாரம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இருந்து இளைப்பாறிய அலுவலக உதவியாளர் திரு. ந. நல்லைநாதனுக்கும் கிராமசேவை அலுவலர்கள் திருவாளர்கள் வே. தர்மலிங்கம், க. சந்திரசேகரன், எஸ். அழகரத்தினம் ஆகியோருக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. க. பாலசிங்கத்திற்கும் பிரிவுபசார விருந்து, உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

# பாராட்டு வைபவம்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் நீண்டகாலம் சேவையாற்றி தற்போது ஓய்வுபெற்றுச் சென்றவர்களுக்கும் இடம் மாற்றலாகிச் சென்றவர்களுக்கும் செயலக புனர்வாழ்வுப் பிரிவின் நலன்புரிச் சங்கத்தினர் பாராட்டு வைபவம் ஒன்றினை நடாத்தினர்.

செயலிட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் தலைமையில் செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் புனர்வாழ்வுப் பிரிவைச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (71)

# "போர்க்காலங்களில்— ச.ச. நிலையங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது"

(யாழ்ப்பாணம்)

"போர்க்கால சூழலில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இந்த வகையில் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் பணிகள் பாராட்டத் தக்கவையாகும்".

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு தலைவர் ஆ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் பாசையூர் சிற்றூராட்சித் தலைவர் திரு. க. சச்சிதானந்தசிவம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வைபவத்துக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பிரபாலசிங்கம், திரு. கே. சிவமகாராசா, திரு. கே. திவாகரராசா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரியாலைப் பொறுப்பாளர் திரு. பாண்டியன், அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திருபாலன், கிராம சேவை அலுவலர் திரு. ம. சுந்தரலிங்கம், திரு. டி. ஏ. எம். குணசிங்கம் ஆகியோரும் பரிசளிப்பு வைபவத்தில் உரையாற்றினர்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வீரமரணமடைந்த மேஜர் டயஸ் கந்தசாமியின் மனைவி திருமதி புனிதவதி தவராசா பரிசில்களை வழங்கினர்.

மேற்படி நிகழ்ச்சிகளின் இறுதியில் நிலையச் செயலாளர் திரு. ச. தவச்செல்வன் நன்றி தெரிவித்தார். இதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (வி)

## அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

கல்விக் கதிர் சஞ்சிகை அறிமுக விழா நாளை 21ம் திகதி சுதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தெணியான் மற்றும் கல்வி அதிகாரிகள் கல்விக்கதிர் சஞ்சிகை பற்றி விமர்சன உரை நிகழ்த்துவார்கள். (152)

# நானூறு ஹெக்டரில் உபஉணவு செய்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் 400 ஹெக்டரில் உப உணவுச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துரிதவிவசாயத்திட்டத்தின் விளைச்சலின் பிரகாரம் யாழ். மாவட்டத்திலுள்ள பன்னிரண்டு கமநல சேவை நிலையங்களிலும் 117 ஹெக்டரில் குரக்கனும், 73.25 ஹெக்டரில் பயறும், 172.5 ஹெக்டரில் எள்ளும், 10 ஹெக்டரில் உழுந்தும், 33 ஹெக்டரில் மரவள்ளியும் பயிரிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

## கருத்தரங்கு

(உடுவில்)

உடுவில் கோட்டத்தனிப் பாடசாலைகளில் விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்று இம்மாதம் 24-ம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (109)

# வலது குறைந்தவர்களுக்கு புனர்வாழ்வு வேண்டி மகஜர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வலது குறைந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்குமுகமாக தங்கி வாழ்ந்து பயிற்சி பெறும் புனர்வாழ்வு ஸ்தாபனங்களை உருவாக்கித் தருமாறு யாழ் மாவட்ட வலதுகுறைந்தவர்களின் புனர்வாழ்வுகழகம், வடக்கு கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளரை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வலது குறைந்தவர்களும் மற்றைய மக்களை போலவே வாழவே விரும்புகிறார்கள். அவர்களும் சமூகத்தில் உள்ளவர்களைப் போலவே தாங்களும் ஒரு வாழ்க்கையை தன்னிச்சையாக வாழ முடியுமென்று எண்ணுகிறார்கள். தென்னிலங்கையில் சிதுவ, வத்தேகம, அம்பிட்டிய, காலி போன்ற இடங்களிலுள்ள வலதுகுறைந்தவர்களின் பயிற்சி பெறும் ஸ்தாபனங்களைப் போன்று எமது பிரதேசத்திலும் ஒரு ஸ்தாபனத்தை உடனடியாக அமைத்து புனர்வாழ்வு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

வலதுகுறைந்தவர்களுக்காக மூன்றுசில்லு சைக்கிள் வண்டிகள் மற்றும் பல்வேறு வாழ்க்கையை வளம்படுத்தக் கூடிய உபகரணங்களையும் ஒதுக்கித் தருமாறு யாழ். மாவட்ட வலதுகுறைந்தவர்களின் புனர்வாழ்வுக்கழகம் கேட்டுள்ளது. (153)

## வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக நலன்புரிச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று 20-ம் திகதி காலை 10-00 மணிக்கு யாழ். மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. (153)

## வேலணையில் உணவு விநியோகம்

(வேலணை)

வேலணை ப. நோ. கூ. சங்கம் தமது வாடிக்கையாளர்களுக்கு 38-ம் கட்ட உலர் உணவு விநியோகத்தை வேலணையில் வைத்து விநியோகம் செய்கிறது.

37ம் கட்டம் உலர் உணவு யாழ்ப்பாணத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (152)

# மீளக் குடியேறும் தீவுப்பகுதி மக்கள்

(ஊர்காவற்துறை)

தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தோர் மீண்டும் தம் சொந்த இடங்களுக்குச் செல்கின்றனர்,

தீவுப்பகுதியிலுள்ள வேலணை சாட்டி, மண்கும்பான், புளியங்கூடல், சுருவில் ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்த மக்கள் திரும்பவும் தமது சொந்த இடங்களுக்குச் செல்கின்றனர். (54)

# வழிபாட்டு தலங்கள் விபரங்கள் திரட்டு!

(சித்தன்கேணி)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சமய வழிபாட்டுத் தலங்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

வடக்கு கிழக்கு மாகாண அரசின் கல்வி, கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாகவுள்ள பௌத்த, இந்து, இஸ்லாம் கிறிஸ்தவ சமய வழிபாட்டுத் தலங்களின் சகல விபரங்களையும் அனுப்பிவைக்குமாறு சுற்று நிருபம் அனுப்பி வைத்துள்ளார். (187)

# உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

"உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கமளிக்கவேண்டும். அதன் மூலம்தான் நாம் சொந்தக் காலில் நிற்கமுடியும்" என்று யாழ். கல்வித்திணைக்கள முறைசாரக் கல்விப் பிரிவினரால் வெளியிடப்பட்ட 'கல்விக் கதிர்' சஞ்சிகை வெளியீட்டின்போது விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பிரமுகர் மூர்த்தி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் இன்றைய சூழலில் கல்விக் கதிர் முக்கியம் பெறுகின்றது என்றும் அத்தோடு உள்ளூர் செய்திகளை நிறைவுகொண்டும் வெளிவந்துள்ளது பாராட்டத்தக்கது என்றும் கூறினார்.

மற்றும் கவிஞர் வாஞ்சிநாதன், விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கப் பொறுப்பாளர் மரிசிலப்பா, மகளிர் முன்னணி பொறுப்பாளர் மாலினி திரு. கனகராசா ஆகியோரும் பேசினர். (152)

## கிளிநொச்சிக்கு யோகி விஜயம்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு. யோகி கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்தார்.

இவர் இங்கு பல பொதுக் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் முன்னணியின் நடவடிக்கைகள் தொடர்பாக உரையாற்றினார். (83)

## தீவுப்பகுதி தபால்கள்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தபால்பொதிகளை புங்குடுதீவு தபாலக ஊழியர்களினால் நேற்று கொண்டுவரப்பட்டு யாழ் பிரதம தபால் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

தீவுப்பகுதிகளுக்கான தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (101)


KALALAYAAH கலாலயா

# டிப்ளோமா
## மனைப் பொருளியல்
## DIPLOMA IN HOME ECONOMICS

★ கேக் ஐசிங்
★ சமையற் கலை

[கிழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள், மற்றும் உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களைக்கொண்டு உணவுகள் தயாரித்தல்]

★ தையற் கலை

[குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான உடைகள் தயாரித்தல், பூவேலைப்பாடுகள்]

★ கூந்தல்அலங்காரம்

[கொண்டைகள் போடுதல், விக் தயாரித்தல், மணப்பெண் அலங்காரம் செய்வித்தல்]

★ கை வேலை

[மக்றமி நூல் வேலைப்பாடுகள், கம்பளி நூல் வேலைப்பாடுகள், பஞ்சில் பொம்மைகள் செய்தல், வாழைநார் வேலைப்பாடுகள்]

★ பூவேலை

[கடதாசியினாலும், துணிகளினாலும் மலர்களை உருவாக்குதல்]

★ வர்ணம் தீட்டுதல்

[துணிகளிலும், கண்ணாடிகளிலும், இசைத் தட்டுகளிலும்]

★ சித்திரக் கலை

[சித்திரங்கள் வரைதல், கோலங்கள் போடுதல்]

★ பயிற்சிக்காலம் 6 மாதங்கள்

- பயிற்சி முடிவில் Diploma in Home Economics தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் வகுப்புகள் திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களில் காலை 9-00 மணிமுதல் பி. ப. 1 மணிவரை நடைபெறும்.
- தொழில்புரிவோர், பாடசாலை மாணவிகள், மற்றும் இல்லத்தரசிகளின் வசதிக்காக சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன.

சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் 25-05-91
கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம் 29-05-91

- இத்துடன் சங்கீதம், நடனம், வயலின், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வகுப்புகளும் மாலை நேர வகுப்புகளாக நடைபெறுகின்றன.

விபரங்களுக்கு:

# கலாலயா

பதிவு இலக்கம். 16020
விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

(இ-4751)

# சகலரும் ஆயுதம் ஏந்தவேண்டிய காலகட்டம் ஏற்பட்டுள்ளது - குகதாஸ்

(யாழ்ப்பாணம்)

"சிங்கள இராணுவத்தின் கொடூர கொலைவெறி நடவடிக்கைக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகளால் நடாத்தப்படும் ஆயுதப் போராட்டத்தில் சகல தமிழீழ மக்களும் ஆயுதம் ஏந்த வேண்டிய ஒரு காலகட்டம் தற்போது ஏற்பட்டுள்ளது."

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. குகதாஸ் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த 18-ம் திகதி நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய முன்றலில் பாரதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர்தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது: தற்போது முனைப்புடன் நடாத்தப்படும் போராட்டத்தில் வயது வித்தியாசமின்றி சிறுவர், பெரியோர் என்ற பேதமின்றி சகலரும் ஆயுதம் ஏந்தினால் மட்டுமே எமது பாரம்பரிய பிரதேசத்தை பாதுகாப்பது மட்டுமன்றி எதிர்கால சந்ததி சுதந்திரமாக வாழும் நிலையையும் ஏற்படுத்தலாம். இல்லாவிடில் தமிழரின் நிலை கேள்விக்குரிய தொன்றாகலாம் என்றார்.

இந்தக் கூட்டத்தில் பாரதி உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

ஆயுதப் போராட்டத்தில், ஆண்கள் மட்டுமே ஆயுதம் ஏந்தவேண்டுமென்ற சட்டவரம்போ, நெறி முறையோ கிடையாது. இன்றைய போராட்டத்தில் பெண்களின் பங்களிப்புக் குறைவாகவே உள்ளது. இந்நிலையை மாற்றி பெருமளவில் பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணிப்பதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைக்கடலில் கடந்த 5ம் திகதி படையினருடன் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த விடுதலைப்புலிகள் இயக்க போராளி சார்லிஸ் (பொன்னுச்சாமி சுகுணராஜ்) பருத்தித்துறை கடந்த 18-ம் திகதிவீரமரணம் அடைந்தார் விடுதலைப்புலிகள் இவருக்கு தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (ஈ)

# பங்கீட்டு முறையில் பாண் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளூடாக பங்கீட்டு அட்டைக்கு சீனி, தேங்காய் எண்ணெய், கொத்தமல்லி ஆகிய பொருட்கள் விநியோகிக்கப்பட்டுவருகின்றது:

இதேவேளை சங்க பேக்கறியில் தயாரிக்கப்பட்ட பாணும் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கட்டு வருகின்றது: (72)

## ஆசிரியர்கள் நேற்று திரும்பினர்

(வேலணை)

இன்று 20ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் தீவுப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் பெருந்தொகையானோர் நேற்றைய தினமே தீவுப்பகுதிக்கு வந்து சேர்ந்துவிட்டனர்.

மிகுதி ஆசிரியர்கள் இன்று காலை வந்துசேர்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது: (75)

## உள்ளூராட்சி சபை தலைவர்கள்தெரிவு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தலைவர்களை ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸா இவ்வாரம் தெரிவு செய்யவுள்ளார்.

ஐ.தே.க. கூடுதல் அங்கத்தவர்களைப் பெற்றுள்ள மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகளுக்கான மேயர் உதவி மேயர் தலைவர் உதவித்தலைவர்களை ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாரம் தெரிவு செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ரி)

## காத்தான்குடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டனர்.

ஏ. கே. 47, எஸ். 84 ரக ரைபிள்கள், துப்பாக்கிகள் ரிப்பிட்டர் சொட்கன்கள், தோட்டாக்கள் ஆகியவற்றை கைப்பற்றினார்கள்

இச்சம்பவத்தை தொடர்ந்து இங்குள்ள பலர் கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணை செய்யப்பட்டுவருகிறார்கள். (ரி)

## ஆணைக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய ஜனாதிபதி நியமித்த தனிநபர்ஆணைக்குழு அடுத்த வாரம்பிரான்ஸ் செல்லவிருக்கிறது:

நீதியரசர் லூசியன் ஹெச்டி அல்விஸ் தலைமையிலான ஆணைக்குழு கடந்த சில நாட்களாக இதிதாக்குதல் தொடர்பான விசாரணையை நடத்தி வருகிறது.

இச்சம்பவத்தில் காயமடைந்த சாரதி ஏற்கனவே ஆணைக்குழு முன் சாட்சியமளித்துள்ளார்.

காயமடைந்த எம். எஸ். எவ். நிறுவன பிரதிநிதிகளான கத்தரீன், ஜோன் பற்றிக், மாறிக் பற்றிக்கியா ஆகியோரின் சாட்சியங்கள் பதிவுசெய்யப்படவுள்ளன; (ரி)

## விபத்தில் வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடியிலிருந்து ஆஸ்பத்திரி வீதியால் நடந்துவந்த வயோதிபர் ஒருவர், மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்:

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையா தர்மலிங்கம் [வயது 72] என்பவரே மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவர். (56)

## கோழிகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாயில் உள்ள சங்கானை கால்நடை வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் கோழிகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டு வருகிறது: (72)

## வணக்க மாதம்

(ஊர்காவற்றுறை)

கடந்த முதலாம் திகதி முதல் யாழ். புனித அடைக்கல மாதா ஆலயத்தில் தேவதாயாரின் வணக்க மாதமாலை ஆராதனை நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 31ந் திகதி வெள்ளிக்கிழமை தேவதாயாரின் சொரூப பவனியுடன் வணக்க மாதம் முடிவுறும். பங்குத்தந்தை அருட் திரு: மங்களராசா ஆராதனைகளை நடாத்தி வருகிறார்; (59)

★ சாவகச்சேரியில்

குளிர்பானங்களையும்,
சிற்றுண்டி வகைகளையும்
பெற்றுக்கொள்ள
நவீன வசதிகளுடன் கூடிய
ஒரே ஸ்தாபனம் ★

"பூம்பொய்கை"

கண்டி வீதி, சாவகச்சேரி.

(எ-1310)

# தீவுப்பகுதி பாடசாலைகள் இன்று முதல் பழைய இடங்களில் இயங்கும்

(வேலணை)

தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் இன்று 20ம் திகதி முதல் பழைய பாடசாலைகளிலேயே இயங்குகின்றன.

ஊர்காவற்றுறைக் கோட்டத்தைச் சேர்ந்த அனலைதீவு, எழுவைதீவுப் பாடசாலைகள் பழைய இடங்களில் நடைபெறும்; ஆனால் ஊர்காவற்றுறைப்பட்டினத்தைச் சேர்ந்த பாடசாலைகள் அந்தந்த இடங்களில் இயங்கமாட்டாது.

வேலணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் 20ம் திகதி முதல் மீண்டும் திறக்கப்பட்டு இயங்கவிருக்கின்றன. (75)

## மருந்து தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ், மாவட்டத்தில்அநேக உபஅலுவலகங்களில் இயங்கி வரும் சித்த ஆயுர்வேத இலவச வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (154)

## ராஜீவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் முக்கிய அமைச்சர்கள் போட்டியிடும் தொகுதியிலும் இன்று வாக்களிப்பு நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜீவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திரா காங்கிரஸ் கட்சிக்கே இருப்பதாக இந்தியாவின் பிரபல பத்திரிகைகள் அபிப்பிராயக் கணிப்பீடுகளை வெளியிட்டுள்ளன:

ரைம்ஸ் ஒவ் இந்தியா, இந்து போன்ற பத்திரிகைகள் ராஜீவ் காந்தியின் வெற்றிவாய்ப்பு குறித்து ஆருடம் தெரிவித்துள்ளன:

இதேவேளையில் இந்திரா காங்கிரஸ்கட்சிக்கும் பாரதிய ஜனதா கட்சிக்குமிடையில் பலத்த போட்டி ஏற்படலாமென்றும் அப்பத்திரிகைகள் கருத்துக் கூறியிருக்கின்றன.

1980, 1984, 1889ம் ஆண்டுப் பொதுத்தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் கட்சியுட்பட பல கட்சிகளின் நிலவரங்களை புள்ளிவிபரமாகவும் இவை தொகுத்துள்ளன: (ஏ)

## இந்தியாவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதுச்சேரி மத்திய ஆளுகைப் பிரதேசத்திலுள்ள 190 மக்களவைத்தொகுதிகளிலும்நடைபெறவிருக்கிறது:

முதல் மூன்றுகட்ட வாக்குப்பதிவு இம்மாதம் 26-ஆம்திகதி முடிவுற்றதும் 27-ஆம் திகதி வாக்குகள் எண்ணுவது ஆரம்பிக்கப்படும்.

இது இவ்வாறிருக்க பீஹார், உத்தரப் பிரதேஷ், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் பதற்றத்தொகுதிகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் இராணுவத் துணைப் படையினரை அனுப்பிவைத்துள்ளது:

இம்மாநிலங்களில் பதற்றம் நிலவுவதாலேயே இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

# நோர்வேயில் நடந்த தமிழீழ மாநாடு

(ரொன்டைம்)

'தமிழீழம்' தொடர்பான முக்கிய மாநாடு அண்மையில் நோர்வேயில் நடைபெற்றுள்ளது.

'ரொன்டைம்' நகரில் இம்மாநாடு' 3 நாட்கள் நடைபெற்றுள்ளது; இம்மாநாட்டில் 'நோர்வே மனித உரிமைகள் சபை' உட்பட பல அரசு சார்பற்ற அமைப்புகள் பங்குபற்றி தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இம்மாநாட்டில் தமிழீழத்தின் எதிர்கால நடவடிக்கை குறித்தும் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸி)

## அமைச்சர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இலங்கைக்கு முன்னர் இந்தியப் படையை அனுப்பியது போன்றதவறை இந்திய அரசியல் வாதிகள் இனிமேல் செய்யமாட்டார்கள்.

ராஜீவ் காந்தியும் ஏனைய இந்தியத் தலைவர்களும் முன்னர் விட்டதவறுகளை உணர்ந்துவிட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்: (ரி)

## அரிசி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யான அரிசியை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்த அரிசியை இடம்பெயர்ந்த தீவுப்பகுதி மக்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது; (52)

## அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வியா வரவேற்றுள்ளது.

அரசியல் ரீதியான தீர்வே இலங்கையில் எதிர்காலத்தில் தமிழர், சிங்களவருக்கு ஒரு பாதுகாப்பாக அமையுமென்றும் ஆஸ்திரேலியா நம்பிக்கை தெரிவித்துள்ளது;

இராணுவத் தீர்வைக் கைவிட்டால், அரசியல் தீர்வுக்கான சூழ்நிலை உருவாகுமென்றும் ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது; (ஸி)

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை அமெரிக்கர்கள் இலங்கை பற்றி பயம்கொண்டுள்ளதாக அண்மையில் இலங்கை வந்த உல்லாசப் பயணி ஒருவர் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது; (ஸி)

## திடீர் சோதனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்காக வீதிகளில் திடீர் சோதனைகள் நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

இச்சோதனை நடவடிக்கைகளுக்கு சிரமத்தைப்பாராது ஒத்துழைப்புத் தரும்படி பொதுமக்களை புலிகளின் வட்டாரங்கள் கேட்டுக்கொள்கின்றன: (க)

## தடுத்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரைக்கண்டி, கைதடி), ஞானமுத்து கருணாகரன் (முகுந்தன் வீதி. உடுவில்), பூச்சி புஸ்பரட்ணம் (ஆனந்தபுரம். கிளிநொச்சி), பிறைசூடி சிவேலி (செல்வாநகர், கிளிநொச்சி), ஜீவராசா சிவகுமார் (றெட்பானா, விசுவமடு); நாகலிங்கம் மகேந்திரன் (வவுனியா), சின்னத்தம்பி மாணிக்கராசா நெலுக்குளம், வவுனியா), கனகசபை தயாபரன் [குமாரங்குளம் வவுனியா], அருளானந்தம் மைக்கேல் [குமாரங்குளம் வவுனியா]; அந்தோனி பேர்னட் ஜோசப் (குமாரங்குளம் வவுனியா], பழனிவேல் பேரின்பராசா (குமாரங்குளம் வவுனியா], மலையாண்டி ராஜா? [கிவடிபுரம் வவுனியா], கறுப்பன் வேலு [குமாரங்குளம் வவுனியா], கறுப்பையா அழகர்சாமி[சாம்பல்தோட்டம்- வவுனியா), மாரிமுத்து செல்வம் (குமாரங்குளம்-வவுனியா), பழனிவேல் நாகநாதன் (குமாரங்குளம்-வவுனியா), மொட்டையன் துரைசாமி (குமாரங்குளம்-வவுனியா) கந்தப்பு பரமசிவம் (நெலுக்குளம்-வவுனியா). அழகேஸ் பரமசிவம் [குமாரங்குளம் வவுனியா]; (க)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ... யாழ்ப்பாணம் ... வீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under ... number B/133306/31.